DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 69/2014 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 8 |
| Name | கோபால் |
| Father / Husband Name | சங்கையா |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 08th March 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை:-**

1) நான் சோழபுரம் கீழத்தெருவில் குடியிருந்து வருகின்றேன். நான் சோழபுரம் பஸ் ஸ்டாப் அருகே டீக்கடை வைத்து நடத்தி வருகின்றேன். அ.சா.1 கோதண்டராமனை தெரியும் எங்கள் ஊர்க்காரர் அவ்வளவாக பழக்கம் இல்லை. அ.சா.1 க்கு எங்கள் ஊரில் மேலத்தெருவில் சொந்தமாக வீடு உள்ளது. அ.சா.1 ன் அக்கா பெயர் உமையாள் அவர் என் கடையில் டீ வாங்க வருவார்.

2) எனக்கு வழக்கு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை சம்பவ சமயம் நான் காலை 08.00 மணிக்கு டீக்கடையை அடைத்து விட்டு வயலுக்கு வேலைக்கு சென்றுவிட்டேன் மாலை 06.00 மணிக்கு

தான் வந்தேன். என் கடை அருகே விபத்து ஏற்பட்டதாகவும் அதில் உமையாள் என்பவருக்கு காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

---

<u>Hostile</u> (அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பகுதி பிறழ்சாட்சியென அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது).

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1) கடந்த 29.09.2012 ம் தேதி மாலை 03.00 மணியளவில் விபத்தில் இறந்த உமையாள் எனது டீக்கடையில் டீ வாங்கிக்கொண்டு சிவகங்கை - திருப்பத்தூர் ரோட்டில் எனது கடையில் இருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து ரோட்டை கடந்த போது சிவகங்கை - திருப்பத்தூர் நோக்கி வந்த TN 63 AB 1224 என்ற மாசாணியம்மன் என்ற பெயரிடப்பட்டிருந்த டிப்பர் லாரியை பின்னால் பெயர், விலாசம் தெரிந்த எதிரி அதிவேமகாவும், அஜாக்கிரதையாவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமல் ஓட்டி வந்து ரோட்டின் நடுவே சென்ற போது உமையாள் மீது மோதி உமையாளுக்கு தலையின் பின்புறம் அடிபட்டு ரத்தக்காயமும், வலது தோள்பட்டையில் ரத்தக்காயமும் ஏற்பட்டதாகவும், டீக்கடையில் இருந்த நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த முத்துக்குமார், முருகானந்தம், வெற்றிவேல், வரதராஜன் ஆகியோர் ஓடிவந்து தூக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் அங்கு பரிசோதித்த மருத்துவர் உமையாள் இறந்துவிட்டதாக கூறியதாகவும், சம்பவம் குறித்து கோதண்டராமனுக்கு தகவல் சொன்னதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

நான் சொல்வது போல் சம்பவம் பற்றி எதுவும் கேள்விப்படவில்லை என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 08.03.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**